விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 07 சனிக்கிழமை (23.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 269

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்து செய்ய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை!

### சட்டமா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்து செய்வதற்கான உத்தரவை பிறப்பிப்ப தற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல் லை என மேல் முறையீட்டு நீதிமன்றத் திற்கு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி. ,ஜாதிக ஹெல உறுமய மற்றும் சிங்கள ஜாதிக சங்கம் ஆகியன இணைந்து போர்நிறுத்த உடன்படிக்கை யை ரத்து செய்யுமாறு கோரி மேல் முறை யீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே அவர் இவ் அறிவித்தலை விடுத்துள்ளார்.

மேல் முறையீட்டு நீதிமன்றில் நீதிபதி எஸ்.சிறிஸ்கந்தராசா நேற்று இந்த மனு மீதான விசாரணையை கொண்டு வந்த போது அரசாங்க சிரேஷ்ட சட்டத் தரணி கரிற்ன பெர்னாண்டோ இந்த ஆட் சேபனையை முன்வைத்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கை நீதித்து றையுடன் சார்ந்தவிடயமல்ல என்றும் அரசியல் சார்ந்தோரால் இன்னொரு சார்பானவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை தடைசெய்ய மேல்முறை யீட்டு நீதிமன்றத்திற்கு அனுமதி இல்லை எனவும் சட்டமா அதிபர் அறிவித்துள் ளார்.

2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (எ-5)


## இணைத் தலைமையின் அறிக்கைக்கு புலிகளிடமிருந்து சாதகமான பதில்

### பிறட்ஸ்கர் ஊடாக அனுப்பிவைப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளினால் பிறசெல்ஸில் வைத்து வெளியிட்டுள்ள அறிக் கைக்கு விடுதலைப்புலிகள் சாதகமான பதிலை வழங்கியுள்ளனர்.

நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான் பிறட்ஸ்கருடனான சந் திப்பில் இச் சாதகமான முடிபு தெரிவிக்கப்பட்டுள் ளதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



## கப்பல் மூலம் பொருட்களை கொண்டுவர யாழ்ப்பாண வர்த்தகர்கள் முன்வரவில்லை

### அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கவலை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து பொருட்களை கப் பல் மூலம் கொண்டு வருவதற்கு யாழ்.வர்த் தகர்கள் எவரும் முன்வரவில்லை என அத் தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவா ரட்ண வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் யாழ்.நோக்கி வரவுள்ள 'இத்துருவ' சரக்குக் கப்பலில் யாழ்.தனியார் வர்த்தகர்களுக்கு பொருட்கள் கொண்டு வரு வதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் அவர்கள் எவரும் பொருட்களை கொண்டுவர முன்வரவில்லை என ஆணை யாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வர்த் தக நிலையங்க (04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி திருமலை விஜயம்

(திருகோணமலை)

பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜ பக்ஷ தலைமையிலான உயர்மட்டக் குழு வொன்று நேற்று திருகோணமலைக்குச் சென்றது.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகா ,எயார் சீப் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோரும் நேற்று திருமலைக்குச் சென்றனர்.

திருகோணம (04 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேப் பிரதமருடனான பேச்சிற்கு ஹெல உறுமய,ஜே.வி.பி கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கும் நோர்வேக்குமான இரு தரப்பு உறவு மேம்படுத்தப்படவேண்டும் என்றும் அமைதி முயற்சிகளில் நோர்வே நீடிக்க வேண்டும் என்றும் நோர்வே பிரதமர் டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளமைக்கு ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே. வி.பி ஆகியன எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் சமாதான செயலகம் உருவாக்க 27 மில்லியன் ரூபா

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம் சமாதான செய லகத்தை உருவாக்க 27 மில்லியன் ரூபா நிதி உதவியை நோர்வே ஒதுக்கீடு செய்துள் ளது.இது தொடர்பாக நோர்வேத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு;

இலங்கையில் அடுத்த ஆண்டு முஸ்லிம் சமாதான (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கால்நடைத் தீவனங்களை பெறுவதற்கு பதிவினை மேற்கொள்ளுமாறு பணிப்பு

கால்நடைகளை வளர்ப்போர் அவற்றுக்கான தீவனங்களைப் பெறுவதற்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வட மாகாண உதவி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அது தொடர்பான பதிவினை தத்தமது பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களில் பதிவினை மேற்கொள்ளமாறு கேட்கப் பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளினால் கால்நடைகளுக்கான தீவனங்களான கோழித் தீவனம், கறவைப் பசுத் தீவனம் ஆகியவற்றிற்கு பெருந் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் கால்நடைப்பாவனையாளர்கள் தமது கால்நடைகளுக்கான தீவனங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே இத் தீவனங்களை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு அரச அதிபர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத் தீவனங்கள் பெரும்பாலும் ஐப்பசி மாத முற்பகுதியில் இங்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

எனவே கால்நடை வளர்ப்போர் தத்தம் பிரதேச கால்நடை ல்வத்திய அலுவலகங்களில் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஏ)

# உணவுப் பொருட்கள் இன்மையால் உணவகங்களை மூட வேண்டிய நிலை

## உரிமையாளர்கள் கவலை

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பொருட் தட்டுப்பாட்டினைத் தொடர்ந்து சிற்றுண்டிச் சாலைகளுக்குத் தேவையான அரிசி, மா , சீனி, பால்மா மற்றும் உப உணவுப் பொருட்களினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் சிற்றுண்டிச்சாலைகளை மூடும் நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

கள்ளச் சந்தையில் இப் பொருட்களினை பன்மடங்கு விலை உயர்வில் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை அப் பொருட்களினை பெற்று வியாபாரத்தினை நடத்த முடியாதுள்ளது. அவ்வியாபார நடவடிக்கையினால் நட்டத்தையே எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அநேகமான சிற்றுண்டிச்சாலைகள் மரக்கறி விற்பனை நிலையங்களாக மாறிக் கொண்டுவருவதை குடாநாட்டின் பல இடங்களில் காணக்கூடியதாகவிருக்கிறது.

இதேவேளை யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உணவகங்களுக்கு பொருட்களை வழங்குவது தொடர்பாக வணிகர் கழகம் பதிவினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-133)

# பொத்துவில் படுகொலை வழக்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

அம்பாறை பொத்துவில் படுகொலை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணையம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இது குறித்து மனித உரிமைகள் ஆணையத்தின் கூடுதல் செயலாளர் நிகால் புஞ்சிக்கேவ கூறியதாவது,

அம்பாறை மற்றும் கல்முனை பிரதேச மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகள் பொத்துவிலில் விசாரணைகளை நடத்த அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இரு அலுவலகங்களுடன் இணைந்து முழு அளவில் விசாரணை நடத்தப்படும். இப் படுகொலை தொடர்பிலான இராணுவம் மற்றும் பொதுமக்களின் செயற்பாடுகள் உள்ளிட்டவைகளை ஆராய்ந்து வருகிறோம் என்றார் அவர். (எ-5)

# உலக உணவுத் திட்டத்தின் பணி தொடர்வதாக அறிவிப்பு

இலங்கை அரசாங்கத்திற்கும் உலக உணவுத் திட்டத்திற்கும் இடையே உடன்படிக்கையின்படி தமது பணிகள் யாழ்.குடாநாட்டிலிலும் ஏனைய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

உலகத்திட்டம் யாழ்ப்பாணத்தில் அதன் பணியை இடைநிறுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அது உண்மைக்குப் புறம்பானதாகும்.

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உலக உணவுத் திட்டத்தின் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இலங்கையில் எப்பகுதியிலும் தனது பணி இடைநிறுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஏ)

# ஒரு மாதத்துக்கான பொருட்கள் கப்பல் மூலம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

ஒரு மாத காலத்துக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவாரட்ண வலம்புரிக்குத் தெரிவித்தார்.

மூன்று வாரங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களே கையிருப்பில்உள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளமை குறித்து கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

3 ஆயிரம் மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் தற்போது காங்கேசன்துறையில் இறக்கப்பட்டு வருவதாகவும் இத்துருவ என்ற கப்பல் திருகோணமலையில் அத்தியாவசியப் பொருட்களை ஏற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மக்களுக்கான தேவைகள் குறித்து தான் விழிப்புடன் இருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில்உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட அரசு ஒருபோதும் இடமளிக்காது எனவும் கூறியஅவர் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ந்து அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நிவாரண விநியோகத்தைத் தவிர வேறு இடங்களில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

# குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)

அல்வாய் தெற்கு ஓடைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தனிப்பட்ட பிணக்கே இச் சம்பவத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின்போது அதே இடத்தைச் சேர்ந்த பொன்னர் கிட்டிணர் (வயது-55) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இது தொடர்பாக மந்திகை மருத்துவமனைக்குச் சென்றுவிசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம், பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (எ-1)

# கிளைமோர் மீட்பு

(வவுனியா) -

அநுராதபுரத்திலிருந்து மதவாச்சி நோக்கி சென்ற வான் ஒன்றிலிருந்து கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அவ் வானை வழி மறித்த பொலிஸார் அதனைச் சோதனையிட்ட போது அக் கிளைமோர்க் குண்டுகளும் வேறு சில வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவை சிலாபம் நோக்கி கொண்டு செல்லப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (ஏ)

# சிங்கள ஊடகவியலாளர் கொலை வழக்கை விரைந்து மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவு

சிங்கள ஊடகவியலாளர் லக்மல் டி சில்வா கொலை வழக்கை விரைந்து நடத்த வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிமன்றம் உத்தர்விட்டுள்ளது.

கல்கிசை மேலதிக நீதிபதி கிரிசாந்தி தொடங்கொட இது தொடர்பான வழக்கின் விசாரணையில் சந்தேக நபர்கள் மீது விசாரணை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க அச்சப்பட்டால் சந்தேக நபர்கள் குறித்த விபரங்களை நீதிமன்றத்திற்கு இரகசியமாகத் தெரிவிக்கலாம்.

நடவடிக்கை எடுக்கக் கூடிய தகுதி வாய்ந்தவர்கள் அதனைச் செய்வார்கள் என்றார்.

ஆனால் அந்த வழக்கில் மேலும் விசாரணை நடத்தப்பட வேண்டியுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை விரைவில் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி ரஞ்சனுக்கு நீதிபதி உத்தரவிட்டார். (எ-1)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் சு.பசுபதி எழுதிய ‘இறைவற்கொரு பச்சிலை’ ‘லப்பாம்-டப்பாம்’ நூல்கள் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு சைவ வித்தியாவிருத்திச் சங்க பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை சைவ வித்தியாவிருத்திச் சங்க நிதிச் செயலர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

முதற்பிரதிகளை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மற்றும் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனக சபாபதி ஆகியோர் பெறவுள்ளனர். (ஏ)

# கிரிக்கெட் விளையாடச் சென்ற மூவர் காணாமல் போயுள்ளனர்

## ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் கிரிக்கெட் விளையாடச் சென்ற இளம் குடும்பஸ்தர் உட்பட மூவரை காணவில்லை என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி மாலை 3 மணியளவிலிருந்து அவர்களைக் காணவில்லை என அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலைவாணி லேன் கட்டைப்பிராயைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான இராஜேந்திரா பத்மநாதன்(வயது-21), அவரது சகோதரன் சுரேஷ்குமார்(வயது-18) மற்றும் வீ.எச். லேன் இருபாலையைச் சேர்ந்த லொறி சாரதியான தர்மகுலசிங்கம் நிஷாந்தன் (வயது-21) ஆகிய மூவரையுமே காணவில்லை என முறையிடப்பட்டுள்ளது. (எ-5)

# இந்தியா நேரடியாக தலையிட வேண்டுமென உடனடியாக மக்கள் எதிர்பார்க்கவில்லை

## மாவை.சேனாதிராஜா பி.பி.ஸிக்குப் பேட்டி

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்தியா நேரடியாக தலையிட வேண்டும் என உடனடியாக எதிர்பார்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். லண்டன் பி.பி.ஸிக்கு அவர் சென்னையிலிருந்து வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். நோர்வேயூடாக இராஜதந்திர நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டு வருவது எங்களுக்குத்தெரியும். அவ்வாறில்லாது நேரடியாக தலையிடுவதனால் அதற்குரிய சந்தர்ப்பத்தின்போது அது எவ்வாறான நடவடிக்கையாக இருக்க வேண்டும் அல்லது அவர்களின் இராஜதந்திர நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டுமென்பது குறித்து மீண்டும் பேச வேண்டும் எனவும் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார். (ஏ)



திருகோணமலை நிலைமைகள் தொடர்பாக புதிய கண்காணிப்புக் குழுத் தலைவர் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சீ.எழிலனைச் சந்தித்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பொறுமையற்று, நிதானம் தவறி, உணர்ச்சிவசப்பட்டு நடப்பதினால் நமக்கு ஒரு லாபமும் ஏற்படாது.
> —பிளேட்டோ

வலம்புரி

# ஹெகலிய ரம்புக்வெலவின் ஆத்திரம் நியாயமற்றது

எதுக்கெடுத்தாலும் சர்வதேசத்தின் விசாரணைக் குழு தேவை என்ற கோஷம் இலங்கையில் சர்வசாதாரணமாகிவிட்டது.

இது பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெலவின் ஆதங்கம்.

பொத்துவில் பகுதியில் பதினொரு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு சர்வதேசம் சார்ந்த விற்பனர்கள் அடங்கிய குழு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கை அமைச்சர் ரம்புக்வெலவுக்கு கடும் ஆத்திரத்தைக் கொடுத்திருக்க வேண்டும்போலும்.

எதற்கெடுத்தாலும் சர்வதேச விசாரணை குழுவை கோரும் கலாசாரம் இங்கு சர்வசாதாரணமாகிவிட்டது. கடையில் களவு போனாலும் சர்வதேச விசாரணைக் குழுவைக் கூப்பிடுங்கள் என கேட்பார்கள் போலிருக்கிறது என்றவாறு தன் கோபத்தைக் கொட்டித் தீர்த்துள்ளார் அவர்.

சர்வதேச விசாரணைக்குழுவைவிட இலங்கையில் துறைசார் வல்லுநர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தகுந்த முறையில் விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் தனது கோபத்திற்கான காரணத்தை நியாயப்படுத்த முற்படுகின்றார் அமைச்சர் ரம்புக்வெல.

இவ்விதமாக நியாயப்படுத்துதலானது அமைச்சர் ரம்புக்வெல அமைதியான-சமாதானமான சூழலில் தனது வாழ்வியலை ஆரம்பிக்கவில்லை என்பதை நிரூபித்துள்ளது.

மனித உயிரின் பெறுமானத்தை அவர் இம்மியும் மதிக்கவில்லை. கடையில் திருடப்படுவதையும் அப்பாவி மக்கள் இறந்ததையும் சமப்படுத்திப் பார்க்கம் அவரின் நோக்கில் பக்குவமின்மை பளிச்சிடுகிறது.

பரவாயில்லை. எத்தனையோ அசுர குணங்களை எல்லாம் தாங்கிக் கொண்ட இந்தப் பூமி அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவை மன்னித்துக் கொள்ளும்.

எனினும் ஓர் பொறுப்பான பதவியிலிருப்பவர்களிடம் மனித நேயம், மனுநீதி இருக்க வேண்டும்.

பொத்துவில் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட பதினொரு முஸ்லிம்கள் தொடர்பில் அதிரடிப்படையினர் மீது ஒரு சாராரும் விடுதலைப் புலிகள்மீது இன்னோர் சாராரும் குற்றஞ்சாட்டிவருகின்றனர்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக இருக்கக் கூடிய முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் பொத்துவில் படுகொலைக்கு அதிரடிப்படையினரே பொறுப்பு என வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் உயிர் தப்பி-ஆபத்தான நிலையில் வைத்தியசாலையிலிருக்கும் முஸ்லிம் இளைஞர் உண்மைகளை எல்லாம் கூறுவார்.

அவர் ஒருவரே கண்கண்ட சாட்சி என்றெல்லாம் அமைச்சர் ரம்புக்வெல கூறியுள்ளார். ஒரு உண்மையைப் பொய்யாக்கக் கூடிய ஒருவரையே பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பேச்சாளராக நியமிப்பது வழக்கம்.

அவ்வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொருத்தமானவரைப் பேச்சாளராக நியமித்துள்ளார்.எனினும் ஒரு விடயத்தில் அமைச்சர் ரம்புக்வெல தவறிழைத்து விட்டார்.

அதாவது படையினரா? புலிகளா? என்ற கேள்வி எழுகின்றபோது அதற்கான முடிபை கண்டறிவதில் சர்வதேச விசாரணைக்குழு இருப்பதுதானே நியாயமானது.

இலங்கையில் துறைசார் வல்லுநர்கள் இருக்கலாம். ஆனால் படையினரா? புலிகளா? பொத்துவில் கொலைக்குக் காரணம் என்ற முற்றுப் பெறாத வினாவுக்கான விடையை கண்டறிவதில் சர்வதேச விசாரணைக் குழுவை நியமிப்பதன் ஊடாகவே உண்மையான-நீதியான தீர்ப்பைப் பெற முடியும்.

இது விடயத்தில் அமைச்சர் ரம்புக்வெல அந்தரப்பட்டுவிட்டார். இதனைப் பார்க்கும்போது,

'அதோ தலையில் கோழி இறகு தெரிகிறது' என தெனாலிராமன் கூறியபோது குற்றம்புரிந்த அந்தப் பெண் அடைந்த பதற்றத்தைப்போலல்லவா இருக்கிறது.

# ஏ-9பாதையைத் திறக்கக் கோரி ஜனாதிபதிக்கு விளக்கக் கடிதம்

## யாழ்.ஆயர் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ-9பாதையின் தேவைப்பாடுகளை விளக்கி யாழ்.ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் யாழ்.குடாநாட்டையும் பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் ஏ-9 பாதை திறந்து வைக்கப்பட்டது.

வடபகுதியின் இயல்பு நிலையைப் பேண இது பெரிதும் துணை புரிந்தது. ஓகஸ்ட் 11 ஆம் திகதி முதல் இப் பாதை மூடப்பட்டதால் வடபகுதி மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். பின்வரும் காரணங்களுக்காக இப் பாதை திறக்கபட வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான 5 ஆயிரம் தொன் உணவுப் பொருட்கள் 200 லொறிகளில் தினமும் இப் பாதை வழியாக வந்து சேர்கிறது. பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களும் இப் பாதை வழியே வருகிறது.

நோயாளர் அம்புலன்ஸ் மூலம் நாளாந்தம் இப்பாதை வழியே மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்படுகின்றனர். விவசாயப் பொருட்கள் அன்றாடம் பிடிக்கப்படும் மீன்கள் போன்ற பொருட்கள் கொழும்புச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றது.

அன்றாடம் 5 ஆயிரம் மக்கள் இப் பாதை வழியே தென் பகுதிக்கும் வடபகுதிக்கும் பயணம் செய்கின்றனர். இப்பொழுது 20 ஆயிரம் மக்கள் இப் பாதை மூடப்பட்டதால் கைவிடப் பட்ட நிலையில் இரு பகுதியிலும் உள்ளனர்.

சுனாமி இயற்கை அனர்த்த பேரழிவின் மீள் கட்டுமானப் பொருட்களான மண், கல், சீமெந்து, இரும்பு என்பன இப் பாதை வழியே கொண்டுவரப்படுகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இப்பாதையைத் திறக்கும்படி புலிகளிடம் வேண்டியுள்ளனர். அவர்களும் சம்மதித்துள்ளனர். ஐ.சி.ஆர்.சியினர் இப்பாதைக்கான மேற்பார்வையை மேற்கொள்வார்கள். எனவே இப் பாதையை பொதுமக்களின் பாவனைக்கு மிக விரைவாகத் திறக்கும்படி பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் வழங்கும்படி மேன்மை தாங்கிய தங்களுக்கு அவசரமாக வேண்டுகோள் விடுகிறோம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யுத்தம் நிறுத்தப்பட்டால் மட்டுமே கண்ணிவெடிகளை அகற்ற முடியும்

## பிரித்தானிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்போது தோன்றியுள்ள யுத்தம் நிறுத்தப்பட்டால் மட்டுமே கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளை முறையாக மேற்கொள்ளமுடியும். அப்பகுதிகளில் யுத்தம்விரைவில் நிறுத்தப்படும் என சர்வதேச சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது என்று இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் டொமினிக் சில்லிக்கொட்டா தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இலங்கைக்கான யப்பானிய‌த் தூதரகத்திற்கும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தை சார்ந்த இரு நிறுவனங்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்து உரையாற்றும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் வைபவத்தில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரித்தானித் தூதுவர் மேலும் கூறியதாவது;

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தோன்றியுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக அப்பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும்பணிகளை முறையாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

தற்போது யுத்தம் நடக்கின்ற பகுதிகளில் பரவலாக கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. சில காலங்களில் கண்ணிவெடிகள் அகற்றும்பணியாளர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அப் பணியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சில பணியாளர்களை அவரது குடும்பத்தினரும் நண்பர்களும் இப் பணிக்குச் செல்ல வேண்டாம் என்பது ஒரு வகையில் நியாயபூர்வமானது.

குடும்பத்தினர் அச்சம் கொண்டுள்ளதை சின்ன விடயமாக நினைத்து விடக் கூடாது. அவர்களின் பயம் நியாயபூர்வமானது. கண்ணிவெடிகளை அகற்றும் பணியாளர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யும் செயல்களில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சமாதானத்திற்கு எதிராக செயற்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை வளர்க்காமல் முடிபுக்குக் கொண்டு வர வேண்டும் எனஅவர் கூறினார். (எ-5)

# கற்றலுக்கான சூழலை தோற்றுவிக்குமாறு மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்குக் கடிதம்

பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம் உள்ளிட்ட பல நெருக்கடிகளை சந்தித்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் இடர்புரிந்து கொண்டு உரிய நடவடிக்கைகளை ஏற்படுத்தி கற்றலுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 11.08.2006 முதல் யாழ்.குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது கல்விச் செயற்பாடுகள் முற்றாக சீர்குலைந்துள்ளன. அத்தோடு எமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய புற, அக சூழல் மாணவர்கள் மத்தியில் தற்போது மிகக் குறைவாகவேயுள்ளது.

ஏற்கனவே பல சூழற் காரணிகளால் அவ்வப்போது தடைப்பட்டு வந்த எமது கற்றல் செயற்பாடுகள் தற்போது முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இதன் விளைவாக எமது மாணவர்கள் பல நெருக்கடிகளை சந்தித்த வண்ணம் உள்ளனர்.

இவற்றைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். யதார்த்தவாதி எனப் பேசப்படும் தங்களின் செயற்பாடு எமது மாணவர்களின் கற்றலை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்ற அனைத்து விதமான இயல்பு நிலைகளையும் தோற்றுவிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஆகும் என அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நிவாரணம் வழங்காததால் பொதுமக்கள் திண்டாட்டம்

நிவாரணத்திற்கான பொருட்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகளில் நிவாரணப் பொருட்கள் இதுவரையும் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பொருட் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அவலப்பட்டுள்ள போதிலும் சில கிளைகளில் நிவாரணம் வழங்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-1)

# ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமுலாகும்

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொண்டு வரப்பட்ட சட்டத்தின் பிரகாரம் ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட அரச உத்தியோகஸ்தர்களுக்கு மீண்டும் ஓய்வூதியம் வழங்கப்படும் என பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சேமலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெற்று ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியற்றவர்களை மீண்டும் அதற்குள் அங்கீகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந் நடைமுறை எதிர்வரும் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர்தெரிவித்தார். (எ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளகப் பயிற்சி ஆசிரியருக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான ஓகஸ்ட் மாதக்கொடுப்பனவு இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் கல்லூரியில் இயங்கும் வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது.

உள்ளகப் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் வரவுச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துக் கொடுப்பனவைப் பெறுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (எ)

# சுகாதாரப் பணிமனைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தால் சாவகச்சேரி சுகாதாரப் பணிமனைக்கு 52 லட்சம் பெறுமதியான அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இவ் வண்டி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது குடாநாட்டின் தரை வழிப் பாதை துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர முடியாத நிலையில் வவுனியாவில் உள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-133)

# கப்பல்களை கண்காணிப்பதற்கு ஐந்து விசேட குழுக்கள் நியமனம்

(சென்னை)

இலங்கையின் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடும் கப்பல்களை கண்காணிப்பதற்காக கடற்படை தளபதியால் ஐந்து விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

சந்தேகமான முறையில் நடமாடும் கப்பல்கள் தொடர்பாக இருபத்து நான்கு மணித்தியாலமும் மிகவும் கண்காணிப்பில் இருக்குமாறும் அவ்வாறான கப்பல்கள் தொடர் பான விபரங்களை கடற்படை தாக்குதல் பிரிவினருக்கு உடனடியாக அறியத்தருமாறும் இக் குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கைக் கடற்பரப்பில் கடந்த வாரம் முதல் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளை இரட்டிப்பாக்கியுள்ளதாகவும் கொமாண்டர் தசநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ஏ)

# இந்திய அரசின் தகவலையடுத்தே கல்முனையில் கப்பல் தாக்கப்பட்டது

## இந்து நாளேடு செய்தி வெளியீடு

இந்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தகவலையடுத்தே கல்முனைக் கடலில் பயணித்த புலிகளின் கப்பலை தாக்கியழித்ததாக உயர் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று இந்தியாவில் இருந்து வெளிவரும் இந்து நாளேடுசெய்திவெளியிட்டுள்ளது.

இந்திய அதிகாரிகளினால் வழங்கப்பட்ட தகவலையடுத்து விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களும் வெடிபொருட்களும் ஏற்றி வந்ததாக கருதப்படும் கப்பல் இலங்கைப் படைகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதாக பாதுகாப்புத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெயரிடப்படாத குறித்த கப்பலை தரையில் இருந்து 12 மைல் தொலைவில் இலங்கைப்படைகள் வழிமறித்து தாக்குவதற்கான புலனாய்வுத்தகவல்கள் இந்தியாவிடம் இருந்தே கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

எமக்கு இத்தகைய மூன்று கப்பல்கள் குறித்து தகவல்கள் கிடைத்தன. நாம் தற்போது அவற்றில் ஒன்றினைத் தாக்கியுள்ளோம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# பற்றிக்ஸ் கல்லூரியில் தங்கியிருந்த 12 இளைஞர்கள் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் இடம் பெயர்ந்திருந்தோரில் 12 பேர் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லூரியை நேற்றுக் காலை 6 மணிக்கு சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய இராணுவத்தினர், அங்கு பாதுகாப்புக் காரணம் கருதி இடம் பெயர்ந்து தங்கியிருந்த கரையோரப்பகுதியைச் சேர்ந்த 12 பேரை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் உடனடியாக யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களான 12 பேர் விபரம் வருமாறு;

இராசேந்திரம் விஜயகுமார் (வயது 21), வரதராஜா சுதாகரன் (வயது 25) , சிங்கராஜா் பிறேம்சேகர் (வயது 22), சில்வெஸ்ரர் சுதர்சன் (வயது 21),இசிதோர் பத்மராஜா (வயது 21) , தேவராஜகம் சகாஜய ரெஜிஸ்வரன் (வயது 26), அந்தோனிப்பிள்ளை ஹென்றி லுனோஸ் (வயது 31) ,குணரட்ணம் ரோக் பிறாங் கிலின் (வயது 23), வலந்தன் ஶ்ரீதரன் (வயது 19), ஸ்ரானிஸ் லேஸ்ஜெரோ (வயது 25), ரூபட் கிருபாகரன் (வயது 25) செபஸ்ரியான் பிள்ளை சாந்தகுமார் (வயது 20) ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கைதுசெய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பாக யாழ்.மனித உரிமைக் குழு பொலிஸாருடன் தொடர்பு கொண்ட போது இன்று காலை 10 மணிக்கு அவர்களை விடுதலை செய்வதாக கூறியுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி சுவேந்திரராசா தெரிவித்தார். (ச-5,133)

# இந்தியப் பிரதமருடனான சந்திப்பு இறுதி நேரத்தில் இடை நிறுத்தம்

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சென்னை திரும்பினர்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க முடியாத நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சென்னைக்குத் திரும்பியுள்ளனர்.

புதுடில்லி சென்ற அவர்கள் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எல்.கே.நாராயணன் உ்ள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்துப் பேசினர்.

பின்னர் நேற்று இந்தியப் பிரதமரை சந்திப்பதற்கு காத்திருந்தனர். இந் நிலையில் சந்திப்பதற்கு போதுமான கால நேரம் கிடைக்காமையினால் இச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்திய பிரதமர் தம்முடன சந்திக்க முடியாமை குறித்து எந்தவித தகவலும் தெரியப்படுத்தப்படவில்லை என கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.

தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து இந்தியப் பிரதமருக்கு விளக்குவதற்காக தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியா சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# ஹக்கீமின் பாதுகாப்பிலிருந்து அதிரடிப்படையினர் நீக்கம்

(அம்பாறை)

அம்பாறை முஸ்லிம்கள் படுகொலை தொடர்பான சர்வதேச அளவிலான விசாரணை நடத்தவேண்டுமென்று வலியுறுத்திய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கு அளிக்கப்பட்ட அதிரடிப்படைப் பாதுகாப்பை அரசாங்கம் விலக்கிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஹக்கீமின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆறு அதிரடிப்படையினரைக் கொண்ட குழு விலக்கும் உத்தரவை பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நேற்று முன் தினம் பிறப்பித்தார்.

இதனையடுத்து நேற்று முதல் ஹக்கீமுக்கான பாதுகாப்பு விலக்கிக்கொள் ளப்பட்டுள்ளது.

அம்பாறை படுகொலை தொடர்பில் சர்வதேச அளவிலான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று வெளிநாட்டுப் பிர திநிதிகளிடம் வலியுறுத்தி வந்த ஹக்கீம் இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் நேற்று முன்தினம் கடிதம் அனுப்பியிருந்தார்.

மகிந்தவுக்குக் கடிதம் அனுப்பிய பின்னரே பாதுகாப்பு விலக்கிக்கொள்ளப் பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை அமைச்சரவைப் பாதுகாப்புப்பிரிவினர் தொடர்ந்து ஹக்கீமின் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள தாக தேசிய பாதுகாப்புத் தகவல் மையம் தெரிவித்துள்ளது. (ஏ)

## இணைத் தலைமையின் அறிக்கைக்கு...

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று இணைத் தலைமைநாடுகள் வெளியிட்டிருந்த அறிக்கை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நேற்று சந்தித்துப் பேசினார்.

கிளிநொச்சியில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு;

இணைத்தலைமைநாடுகளின் அறிக்கை மற்றும் வடக்கு கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் காணாமல் போதல் மற்றும் படுகொலைகள் ஆகியவை தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரசஸ்ஸில் கடந்த மாதம் 12 ஆம் திகதி கூடிய இணைத்தலைமை நாடுகள், அரசாங்கமும் தமிழீழ்விடுதலைப்புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுக்களை ஒக்டோபர் முதல் வாரத்தில் நோர்வே தலைநர் ஒஸ்லோவில் நடத்த இணக்கம் தெரிவித்திருப்பதாக அறிவித்திருந்தது.

ஆனால் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பதை அரசாங்கம் நிராகரித்து விட்டது. இந் நிலையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு விளக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை தொடர்பில் சாதகமான பதில் அளிக்கப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலக பொறுப்பாளர்கள் கூறியதாக தமிழ்நெற் இணைத்தளம் தெரிவித்துள்ளது.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முழு வீச்சளவிலான செயற்பாட்டின் தேவை குறித்தும் இச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக கிளிநொச்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சந்திப்பின்போது தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். (எ-5)

## கப்பல்...

ளுக்கான பொருட்க்ளை கொழும்பில் இருந்து கப்பலில் யாழுக்கு எடுத்துவரு வதற்கு வசதிகள் செய்த போதும் வர்த்தகர்கள் முன்வராமையால் குறித்த கப்பல் அரச நிவாரணப் பொருட்களே ஏற்றப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தனியார் வர்த்தகர்களுக்கான பொருட்களை கப்பலில் யாழுக்கு ஏற்றிச்செல்வது தொடர்பான விபரங்களை எதிர்வரும் காலப்பகுதியில் பத்திரிகைகள் மூலம் தெரியப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும் திவாரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை வர்த்தகர்கள் கப்பல் மூலம் எடுத்துவந்து விநியோகித்தால் இங்கு ஏற்பட்டுள்ள பொருள்தட்டுப்பாட்டை நீக்கமுடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கான பொருட்களை கப்பல் மூலம் எடுத்துவருவது குறித்து வர்த்தக சங்கப்பிரதிநிதிகளுடன் இராணுவத்தரப்பு கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## நோர்வே...

நோர்வேயுடனான இரு தரப்பு உறவை வலுப்படுத்த வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்கான ஈழத்தை அவர்கள் அடைவதற்கான பாதையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

நோர்வே நாட்டினருக்கும் தமிழீழ கனவு உண்டு. அமை முயற்சிகளில் நோர்வே பங்கேற்க வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ விரும்பினால் ரணில் விக்கிரமசிங்கவின் பாதையை அவர் பின்பற்றுகிறார் என்பது தான். அது மக்களால் கடுமையாக விமர்சிக்கப்படும் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வேயுடனான உறவு குறித்து பேச்சுக்கான காரணங்களை மகிந்த ராஜபக்ஷ விளக்க வேண்டும். மகிந்த சிந்தனையின்படி பேச்சுகளுக்கு முன்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக கீழே போடவேண்டும்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதற்கு நோர்வே அனு மதிக்காது என ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய தேரர் தெரிவித்துள்ளார். (எ-5)

## முஸ்லிம்...

செயலகம் அமைப்பதற்கு 27 மில்லி யன் நிதியை நோர்வே அரசு ஒதுக்கி யுள்ளது. முஸ்லிம் அமைப்புக்கள் அரசியல் கட்சி கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இலங்கை அமைதி முயற்சிகளில் இம் முஸ்லிம் அமைதிச் செயலகம் பங்களிப்புச் செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதி முயற்சிகளில் முஸ்லிம்களின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காக பொதுவான முஸ்லிம் தளம் ஒன்றையும் உருவாக்க அவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக நோர்வே தெரிவித்துள்ளது. (எ-5)

## இராணுவத்...

லைத்துறைமுகம்,சம்பூர் , மூதூர் மற்றும் மாவிலாறு ஆகிய பிரதேசங்களுக்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டதுடன் அப்பகுதிக்கு பொறுப்பான பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர். (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்-கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பீறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org